மாதர் போதினி

No. 262 . நவம்பர் 1919 No. 11

NOTICE

விளம்பரம்

சங்கை பொருந்திய ராஜப்பிரதிநிதியவர்கள் (Viceroy) சென்னைக்கு வரும்போது பெண்கள் வேலைக்காட்சி வைக்க ஆயத்தஞ் செய்து வருகிறார்கள். சங்கை உவில்லிங்டன் பெருமாட்டி (Lady Willingdon) இதற்கு அக்ராசனாதிபராய் (President) இருப்பார்கள். தென் இந்தியாவில் பெண்களாற் செய்யப்பட்டுவரும் நானாவித வேலைகளும் காட்டப்படும். மிஷன் ஸ்தானங்களில் செய்யப்படும் பின்னல் வேலை (Lace), சித்திரத் தையல், விநோதத் தையல் (Embroidery and Fancy Work), பெண் சித்திரக்காரரால் செய்யப்படும் படங்கள் முதலியவை காட்சிக்காகக் கொண்டுவாலாம். இதுவுமன்றி ஊறுகாய், பதனிடப்பட்ட பழங்கள் (Jam, Jelly) முதலிய சாப்பாட்டுப் பதார்த்தங்கள் அனுப்பலாம். பள்ளிக்கூடங்களில் நடக்கும் கல்வி விஷயமாயும், பொதுஜன சங்க சம்பந்தமாய் சிசுக்களைப் பராமரித்தல் விஷயமாயும் யாவரும் பார்த்தறியுங் காட்சிகள் காட்டப்படும். பாலிய பெண்களைப் பொது நன்மைக்காகப் பயிற்சிக்கும் சங்கத்தார் தங்கள் வேலைகளைக் காட்டலாம். ஐதராபாத், கொச்சின், மைசூர், திருவாங்கூர் முதலிய இடங்களிலிருந்து காட்சிப்பொருள் அனுப்புவதாக வாக்களித்திருக்கிறார்கள். கொண்டுவரும் பொருட்கள் விற்பனையாகும். விற்ற கிரயம் பொருட்களை அனுப்பின சொந்தக்காரருக்குப் போகும். காட்சிசாலையால் வரும் மற்ற வருமானம், யுத்தத்தில் உழைத்த மனுஷருக்காகவும் அவர்கள் குடும்பத்துக்காகவும் ஏற்பட்டிருக்கும் ரூபாய்ப் பண்டுக்குப் போகும்.

சங்கை மேரி ராணியம்மாள் கைத்தொழிற்சாலை யொன்று பம்பாயில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது யுத்தத்திற்குப் போனதால் கை

கால் முதலியவை இழந்து உழைக்கத் திராணியற்ற சிப்பாய்களின் சம்ரக்ஷணைக்கென்றே. இது ரூபாய்ப் பண்டு வருமானத்திலிருந்து உதவிபெற்று வருகிறது.

கனம் இராஜப்பிரதிநிதியவர்களின் பத்தினி சங்கை செல்ம்ஸ் வோர்ட் பெருமாட்டி (Lady Chelmsford) வருகிற நவம்பர்மீ 26-ம் 27-ம் தேதிகளில் காட்சிசாலையைத் திறப்பார்கள். இதற்காகக் காட்சிப்பொருள் அனுப்புவோர் எற்கனவே அனுப்பவேண்டியது.

SIN

பாவம்

முதலாவது: பாவம் தேவனுக்கு விரோதமான குற்றம். தேவகற்பனைகளும் பிரமாணங்களும் பரிசுத்த வேதத்திலும் மனிதரின் மனச்சாட்சியிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை மீறுவதே பாவம். (1 யோ. 3 : 4.) ஒவ்வொரு மீறுதலும் கர்த்தாவுடைய பரிசுத்தத்துக்கும் மகத்துவத்துக்கும் விரோதமான துரோகம். ஆகையால் மீறுதல் தண்டிக்கப்படவேண்டும்; குற்றம் ஆக்கினைத்தீர்ப்பை வருவிக்கவேண்டும். பாவியே, உன்னுடைய ஒவ்வொரு பாவமும் உன்பேரில் ஆக்கினைத்தீர்ப்பைக் குவிக்கிறது. உன் பாவங்களின் திரட்சிக்குத்தக்கதாக தேவகோபம் உன்பேரில் நிலைநிற்கிறது. ஆ! சர்வலோகத்தின் பாவத்திற்கும் வரவேண்டிய தேவகோபம் எவ்வளவோ கொடியதாயிருந்திருக்கவேண்டும். கர்த்தராகிய இயேசு அவ்வளவையும் பட்டு உத்தரித்தாரே! பாவி. உன் ஆக்கினையும் அவர்பேரில் வந்தது. அவரை விசுவாசிக்கிற ஒரு பாவி, எத்தனை பாதகனாயிருந்தாலும், குற்றமற்றவன்—ஒருக்காலும் பாவஞ்செய்யாதவன்—என்று தேவனால் எண்ணப்படுகிறான். தான் செய்த சகல பாவங்களுக்குமுரிய குற்றத்தினின்று விடுதலையாகிறான். என்ன கிருபை! என்ன அன்பு! என் பாவமெல்லாம் தூர எறிந்துவிடப்பட்டதாம்! நான் ஒருக்காலும் பாவமே செய்யாதவனும்! இயேசுவே, உமக்கு ஸ்தோத்திரம்.

இரண்டாவது: பாவம் ஆளுகை செய்கிற ஒரு எஜமான். 'பாவம் ஆளாதிருப்பதாக.' (ரோ. 6 : 12.) மனிதனுக்குள்ளிருக்கிற பாவப்பிரமாணம் தேவனுக்குச் சத்துரு. மனிதனே அதற்கு அடிமை. ஒவ்வொரு பாவமும் தேவனுக்கு விரோதமான ராஜதுரோகமும், தேவசத்துருவாகிய மாம்சத்துக்குச் செய்கிற நமஸ்காரமுமாயிருக்கிறது. தீதான ஒவ்வொரு நினைவும் செய்கையும்

இயேசுவாகிய ஞான மணவாளனுக்கு விரோதமாய்ச் செய்கிற துரோகமும், பாவப்பிரமாணமாகிய கெட்ட புருஷனுக்குக் காட்டுகிற கள்ள அன்பாகவும் இருக்கிறது. குணப்படாதவனே, நீ முற்றிலும் பாவத்துக்கு அடிமை. நீ உன்னை சுயாதீனனென்றும், தேவ புத்திரரையோ சுயாதீனமற்றவர்களென்றும் நினைக்கிறாய். நீ உன் சுய இஷ்டப்படியல்ல, உனக்குள்ளிருக்கிற பாவப் பிரமாணத்தின் இஷ்டப்படியே நடக்கிறாய். ஆகையால் நீ சுயாதீனனல்ல; அதோடு சேர்ந்த தேவசத்துருவாயிருக்கிறாய். கர்த்தருடைய சத்துருக்கள் அழிந்தேபோவார்கள். நீயும் அழிந்துபோகாதபடி உடனே குணப்படு. தேவபுத்திரனே, நீ பாவ அடிமையாயிருப்பது மகா பெரிய அநியாயம். உன் ஆண்டவருடைய சத்துருவுக்கு நீ அரை நிமிஷம் இடங்கொடுக்கலாமா? படிப்படியாய் நீ பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலையாவது கூடாதகாரியம். ரோமர் 6-ம் அதிகாரத்தில் சொல்லியபடி ஒரே தடவையாய், உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்துவிடு. பின்பு, திரும்ப பாவம் உன்னை அடிமைகொண்டுவிடாதபடி, உன் உத்தம மணவாளராகிய இயேசுவுடன் இணைபிரியாமல் ஐக்கியப்பட்டு ஜீவித்துவருவாயாக

மூன்றவது: பாவம் இருதயத்தைக் கறைப்படுத்துகிற அசுத்தம். அசுத்தன் தேவசமுகத்தில் சேரக்கூடாது. ஆகையால் ஆதாமும் ஏவாளும் பாவத்தால் அசுத்தரானவுடன் தேவசமுகத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். குஷ்டரோகியான அசுத்தன் தேவசபையிலும் தேவாலயத்திலும் காணப்படவேகூடாது. குணப்படாதவனே, உன் பாவங்களின் அசுத்தத்தினிமித்தம் கர்த்தர் உன்னையும் தமது சமுகத்தில் சேரவிடமாட்டார். இம்மையில் நீ விசுவாசத்தால் அவருடன் ஜீவிப்பதுமில்லை. மறுமையிலும் அவரண்டை நீ கிட்டிச்சேரமாட்டாய். நீ அசுத்தன். தேவபுத்திரரின் பாளையமாகிய தேவசமுகத்திற்கு வெளியேதான் நீ ஜீவிக்கவேண்டும். சுத்தமாகு, அப்போது உள்ளே சேர்த்துக்கொள்ளப்படுவாய். தேவ புத்திரனே, உன் ஒவ்வொரு பாவத்துக்கும் வரும் பலனும் இதுவே. பிரேதத்தைத் தொட்டதால் அசுத்தமான யூதன் சாயங்காலமட்டும் பாளையத்துக்குப் புறம்பேயிருக்கவேண்டும். நீயும் ஒவ்வொரு பாவ அசுத்தத்தின் சம்பளமாக தேவசமுகத்தை இழந்துவிடுவாய். இடைவிடாமல் தேவசமுகத்தில் ஜீவித்து வரத்தக்கதாக, ஓயாமல் கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவனாய் ஜீவிக்கிற விசுவாசியே, நீயே பாக்கியவான். (1 யோ. 1 : 7.)

நான்காவது: பாவம் ஆவிக்குரிய நோய். சரீரத்துக்கு வியாதி எப்படியிருக்கிறதோ, ஆத்துமாவுக்கு பாவமும் அப்படியே இருக்

கிறது. சரீர வியாதியஸ்தனுக்கு உயிர் உண்டு, ஆனால் சுகமில்லை. சுகவீனத்தால், நடக்க பெலனில்லாதிருக்கலாம், அவயவக்குறைவு இருக்கலாம், மாணமும் நேரிடலாம். ஐயோ! இந்நாட்டில் எத்தனை பேரையோ பெரும்பாட்டுரோகம் பிடித்திருக்கிறது! முப்பத்தெட்டு வருஷத்துக்கு மேற்பட்டவர்களும் கூட உண்டு. இயேசுவோடு உலாவுதலின் இன்பத்தை அவர்கள் ஒருநாளும் அனுபவித்ததே இல்லை. பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்டிருந்த ஸ்திரீயைப்போலொத்த ஆவிக்குரிய கூனர் சேர்ந்து கர்த்தருடைய கற்பனைகள் பாரமானவைகள் என்று சொல்லுகிறதில்லையா? ஆவிக்குரிய குருடர், செவிடர், ஊமைகள் எத்தனை ஏராளம்! தேவ குமாரன் இந்த நாளிலும் எத்தனையோ பேரைப் பார்த்து பெருமூச்சுவிடுகிறதில்லையா? ஆனால் 'நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்த' இயேசுசுவாமி இன்றும் அதே நோக்கமாய் இந்த நாட்டில் சுற்றித்திரிகிறார். உன் அண்டையும் வருகிறார், உன் நோயை அவருக்குச் சொல். அவரிடத்தில் போனவர்களில் சுகப்படாதவன் ஒருவன் உண்டோ? உன் நோய் அவருக்கு எம்மாத்திரம். சுகத்தைப் பெற்றுக்கொள். உன் பரிகாரியாகிய நேசருடன் சுகித்திரு.

ஐந்தாவது: பாவம் தீய பழக்கம். ஆதாமின் வம்சத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பாவத்துக்கு இழுக்கிற ஜென்மப் பாவமுள்ளவர்களாய்ப் பிறந்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு இடங்கொடுத்து பாவக் கிரியையைச் செய்வதோ, பெருவெள்ளத்திற்கு மதகைத் திறந்துவிடுவதுபோல இருக்கிறது. ஒரு பாவம் பல குட்டிகள் போடுகிறது. ஒன்றுக்கு இடங்கொடுத்தால், பத்து பின்னாக வரும். பாவத்தில் பழகிவிட்டாலோ, எவ்வளவு சீக்கிரத்தில் அவைகளின் தொகை எண்ணமுடியாமல் போய்விடுகிறது. பழகியபின் அவைகளை ஜெயிப்பதும் விட்டுவிடுவதும் லகுவோ? பாவத்தில் நாம் பழகுமுன் நமது பெற்றோர் நம்மைப் பரிசுத்தத்தில் பழக்கியிருந்திருப்பார்களானால் எத்தனை பாக்கியமாயிருந்திருக்கும். பாவியே! உன் பாவப் பழக்கங்களையெல்லாம் நினை. வெளியரங்கமானவைகளை மாத்திரமல்ல, அந்தரங்கமானவைகளையும் நினை. அவைகளை அடக்க முயலுவது வீண். வஸ்திரத்தைக் களைந்துவிடுவதுபோல, நீ அவைகளை உன்னைவிட்டு அகற்றிவிடவேண்டும். (எபே. 4: 25–32.) உனக்கும் அவைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கவேகூடாது. இந்தக் காரியத்தில் காலதாமதம் செய்யாதே; இரு நினைவுக்கு இடங்கொடாதே. பாவ சொரிமணலில்

அகப்பட்டிருக்கிறாய். சுயபிரயாசம் மோசமாய் முடியும். உன்னுடைய வீணான சகல நடத்தையிலும் நின்று உன்னை ஒரே தடவையாய் சமூலமாய்ப் பிரித்துவிடும்படி உன் மீட்பரை நோக்கி உன் இருகரங்களையும் நீட்டு. அப்போதுதான் பாவஞ்செய்யப் பழகின நீ, இயேசுவுடன் ஐக்கியப்படுவதால் பரிசுத்தத்தில் பழகலாம்.

ஆறவது: பாவம் என்னாளும் விசுவாசிக்குள்ளிருக்கும் பாவக்கவர்ச்சி. பாவப்பிரமாணத்தின் ஆளுகை நீக்கப்பட்டபின் அது செத்துப்போகிறதில்லை. 'நமக்குப் பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்' (1 யோ. 1: 8.) கட்டப்பட்டிருந்த இரண்டு சிங்கங்கள் கிறிஸ்தவனின் பாதையில் இருபக்கத்திலும் நின்று கர்ச்சித்ததாம். அதுபோல, மாம்சமும் சிம்மாசனத்தினின்று தள்ளப்பட்டு இருதயத்தில் வீற்றிருக்கிற இயேசுவின் காலின்கீழ் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோதிலும் அங்கிருந்துகொண்டு ஓயாமல் பாவத்துக்கு இழுத்துக்கொண்டே யிருக்கும். இயேசுவின் சமுகத்தை இழந்த நேரத்தில் அது சிம்மாசனத்தில் குதித்துக்கொண்டு பாவத்தைச்செய்யப் பண்ணிவிடும். ஒரு அறையைவிட்டு விளக்கு நீங்கியவுடன் இருள் அதை மூடிக்கொள்வதுபோல இயேசுவின் சமுகத்தை இருதயத்தில் இழந்தவுடன், பாவ மாம்சம் இருதயத்தை ஆண்டுகொள்ளும். விசுவாசியே! நீ சர்வ ஜாக்கிரதையுடன் இடைவிடாமல் உன் இயேசு எஜமானுடைய சமுகத்தில் ஜீவித்து வருவாயாக. அவர் உன்னை விட்டு அரை நிமிஷம் விலகுவதுமில்லை, உன்னை ஒருநாளும் கைவிடுவதுமில்லை.

TRAINING OF CHILDREN

பிள்ளைகள் வளர்ப்பு

வேதத்தில் நாம் கவனித்தால் எங்கே ஒரு மெய்யான தேவபயமுள்ள தாய் இருந்திருக்கிறாளோ, அங்கே எப்படியும் தேவபக்தியுள்ள பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். தகப்பன்மார் நல்லவர்களாயிருந்தாலும் கெட்டபிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். ஆனால் தாய்மார் நல்லவர்களாயிருந்தவர்களுக்குக் கெட்டபிள்ளைகள் இருந்ததாக ஒரு உதாரணமாகிலும் கிடைக்கவே கிடைக்காது.

உதாரணமாக: ஈசாக்கு, மோசே, தீமோத்தேயு, யோவான்— இவர்களுடைய தாய்மார் எல்லாரும் தேவ பயமுள்ளவர்கள் என்று நிதானிக்க இடமுண்டு. யோசேப்பு, மோசே, ஏலி, சாமுவேல்,

தாவீது—இவர்கள் நல்லவர்களாயிருந்தாலும், இவர்கள் பிள்ளைகள் ஒன்றும் முன்னுக்கு வந்ததாக நாம் வாசிக்கிறதில்லை. காரணமென்ன? இவர்களுடைய தாய்மார் விசேஷித்த தெய்வபயமுள்ளவர்களாயிருந்தார்கள் என்று சொல்லப்படவில்லை; ஆகவே தகப்பன்மார் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் அவர்களைப்போல பிள்ளைகள் வளரவில்லை என்று பார்க்கிறோம். பிள்ளைகளுடைய சுபாவத்திற்கு உத்தரவாதிகள் தாய்மார்தான் என்று இதிலிருந்து அறியலாம். மாயமற்ற, தாழ்மையுள்ள, மெய்யான பக்தி இருக்கும்போது பிள்ளைகள் தேவபயமற்றவர்களாயிருப்பது கூடாதகாரியம்.

அநேக தாய்மார் ஆண்டவருக்காக வேலைசெய்கிறதற்குத் தங்களுக்கு இடமும் நேரமுமில்லை என்று சொல்லுகிறார்கள். இதோ! தாய்மாரே, நீங்கள் பெற்ற பிள்ளைகள்தான் உங்கள் சபைகள். அவர்களை நீங்கள் தேவபயத்தில் வளர்த்தால் அதுவே பிரதானம். அதுவே போதும். வேறே ஒரு ஆத்துமாவை நீங்கள் குணப்படுத்தாவிட்டாலும், சிறு பாலகனாக, பாலகியாக உங்கள் கைகளில் தேவன் தந்து, அவர்கள் பெரியவர்களாகும் வரைக்கும் உங்கள் சொல்சக்திக்குள் வைத்திருந்த அந்த அருமையான ஆத்துமாக்களாவது குணப்படும்படி முயற்சித்து, ஜெபித்திருக்கலாமே. உங்கள் ஊரிலுள்ள ஆத்துமாக்களைப்பற்றி உங்களுக்கிருக்கும் உத்தரவாதத்தைப் பார்க்கிலும், உங்கள் வீட்டிலுள்ள உங்கள் சொந்தப்பிள்ளைகளைப்பற்றி உங்களுக்கிருக்கும் உத்தரவாதம் எத்தனையோமடங்கு அதிகம் என்பதை நீங்கள் உணர்ந்தீர்களா? உங்கள் பிள்ளைகளுடைய ஆத்தும பழி உங்கள் தலைமேல்தான் இருக்கிறது! இவர்கள்தான் உங்கள் முதல் கவலையாய் இருக்கவேண்டியது. அவர்களுடைய இரத்தப்பழியை தேவன் உங்களிடத்தில் தப்பாமல் விசாரிப்பார். ஏனென்றால் விசேஷித்த சலாக்கியம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த சலாக்கியத்தை நீங்கள் சரியாய் உபயோகித்திருந்தீர்களானால், உங்கள் பிள்ளைகள் தேவ ஊழியக்காரராய் இருந்திருக்கலாம்; தேவ கிருபையினால் எத்தனையோ ஏராளமான ஆத்துமாக்களைக் குணப்படுத்த அவர்கள் கருவிகளாயிருப்பார்களே. தேவ ஒத்தாசையை முன்னிட்டு, உங்கள் பக்தியுள்ள நடக்கையினாலும், மாயமற்ற உத்தம மாதிரியினாலும், கண்ணீருள்ள ஜெபத்தினாலும், ஒரு சாமுவேலை, ஒரு தீமோத்தேயுவை, ஒரு மோசேயை எழுப்பக்கூடுமானால், அல்லது மூடியைப்போல, ஸ்பர்ஜனைப்போல, உவேஸ்லியைப்போல ஒரு ஊழியக்காரனை உலகத்திற்குக் கொடுக்கக்கூடுமானால்—இவர்களுடைய முத்துக்கள் நிறைந்த கிரீடத்தில் உங்களுக்கும் பங்கு உண்டே.

ஆனுல், கிறிஸ்தவ தாய்மார் இந்த நோக்கத்தோடு ஜீவிக்கிருர்களா? என்று கேட்டால், ஐயோ! மிச்சமாக இல்லையென்று சொல்லவேண்டுமல்லவா? எத்தனையோ குடும்பங்களில் பிள்ளைகளைக் கெடுக்கிறது தாய்மார் அல்லவா? எப்படிக் கெடுக்கிறோம் என்று கேட்கிறீர்களா? உங்கள் பிள்ளைகள் தங்கள் இஷ்டப்படி எதையும் செய்ய விட்டுவிடுகிறது, அவர்களைக் கெடுக்கிறதுதானே. தங்களுக்கு இஷ்டமான உடுப்பு, இஷ்டமான ஆபரணங்கள், இவைகளுக்கு இடங்கொடுக்கிறது தீமை என்று உணர்ந்தவர்கள் எத்தனை பேர்! இந்த விஷயத்தில் அதிகமாய்க் கெட்டுப்போகிறவர்கள் பெற்றோருக்கு ஒரே மகனுய், அல்லது ஒரே மகளாய் இருக்கிறவர்கள் என்று கவனிக்கலாம். சிறுபிராயத்தில், பள்ளிக்கூடங்களில் படிக்கிற காலங்களில் சுருட்டுப்பிடிக்கவும், குசால் வஸ்திரங்கள் உடுத்தவும், தினிசு தினிசான பட்டுகள் அணியவும் பெற்றோரால் இடம்பெறுகிறவர்கள், பெரியவர்களாகும்போது இவைகளில் எவைகளையாவது விட்டுவிடுகிறதை எங்கேயாகிலும் கண்டீர்களா? தேவனுடைய விசேஷித்த கிருபையால் குணப்படுத்தப்பட்டாலன்றி, மற்றப்படி அவர்கள் ஜீவகாலமெல்லாம் உலக இன்பங்களை அநுபவிக்கிறவர்களாக இருப்பார்களேயன்றி, பரம இன்பங்களை ருசித்து கிறிஸ்துவுக்காக அன்பினுல் ஊழியஞ்செய்கிறவர்களாய் இருக்கவே மாட்டார்கள்.

பின்னும் பிள்ளைகள் மற்றவர்களால் கண்டிக்கப்படும்பொழுது, அல்லது தண்டிக்கப்படும்போது அதற்காக மனம் நொந்துகொள்ளுகிறவர்களும் பிள்ளைகளைக் கெடுக்கிருர்கள். 'உங்கள் மகன், இப்படிச்செய்கிறது சரியல்ல' என்று சொன்னுல், உடனே 'என் மகன், இப்படிச்செய்யமாட்டான்' என்று தாய்மார் சொல்லுகிற ஒவ்வொரு நேரத்திலும் அந்த மகன் கெட்டுப்போகிறதற்கு கை கொடுத்து உதவிசெய்கிருர்கள் என்பதை மறந்துபோகவேண்டாம். சில தாய்மார், உபாத்திமார் அடித்தால் உடனே அதைக்கேட்கப் போய்விடுவார்கள். ஊரில் ஒருவரும் இவனைத் தொட்டுவிடக் கூடாது, உடனே சண்டைதான். 'அவனை எப்படித்தொடலாம்? அவன் ஐயாவர்கள் மகனுச்சுதே, உபதேசியார் வீட்டுப் பிள்ளையல்லவா?' என்று சொல்லுகிற ஒவ்வொரு சமயத்திலும், அந்தப் பையன் துன்மார்க்கத்திலும் பெருமையிலும் வளருகிறதற்கு நீங்கள் உதவிசெய்கிறீர்கள்.

குற்றம் கண்டுபிடிக்கிறதற்காக நான் இவைகளை எழுதவில்லை. இதை வாசிப்பதினுல் தமிழ் நாட்டிலுள்ள ஒரு தாய்தான் தன்னுடைய பிள்ளையினுடைய கெடுதிக்குக் காரணம் என்பதைக் கண்டுபிடித்து

தேவசமுகத்தில்போய், அவ்வளவு பாவத்தையும் மன்னிக்கும்படி கெஞ்சி, இனியாவது தன்னுடைய கடமையைச் சரியானபடிசெய்ய ஏவப்படக்கூடுமானல்—நான் எழுதுகிற நோக்கம் நிறைவேறிற்று என்று எண்ணுவேன். ஏனென்ருல் இந்தப்பாவம் பெரியபாவம் என்று வேதத்தில் காண்கிறேம். 1 சாமு. 3: 13 பார்க்கவும். 'அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமல் போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்திற்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன்.' 'நீ என்னைப்பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்' (2 : 29) என்று கர்த்தர் சொல்லுகிருர்.

தாய்மாரே, அதைரியப்படவேண்டாம். இவ்வளவுகாலமும் தவறிவிட்டீர்களானல் இனியாவது கவனமாயிருங்கள். கடந்துபோன காலம் அழுதாலும் திரும்ப வராது. ஆனலும் சில குறிப்புகள் சொல்லுகிறேன்.

1. உங்கள் பிள்ளைகள் விஷயத்தில் 'கர்த்தரை கனம்பண்ணுங்கள்', 'என்னை கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன்' என்பது பிள்ளைகள் சம்பந்தமாகத்தான் சொல்லப்பட்டது (1 சாமு. 2 : 30). பணம் சம்பாதிப்பதல்ல, தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உயர்ந்த சோதனையல்ல, கர்த்தருக்குப் பயப்படும் பயமே மேன்மையைத் தரும். இது மாருத சத்தியம். ஆகையால், படிப்பல்ல, சோதனையல்ல, தேவபயமே முக்கியமென்று எண்ணி அதை நாடுங்கள். உங்கள் பிள்ளைகள் தேவாலயத்திற்குப் போகிருர்களா? அங்கே பயபக்தியாய் இருக்கிருர்களா? தேவ ஊழியக்காரரை, வயது சென்றவர்களை, தேவபயமுள்ளவர்களைக் கனம் பண்ணுகிருர்களா? இதைக்குறித்து யோசித்துப்பார்த்தீர்களா? 'நீ என்னைப்பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்.' அவர்கள் அழுகை இப்போது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்காதிருப்பதாக, அப்படியானல் மறு உலகத்தில் அவர்கள் அழுகிறதைக் கேட்கச் சமயம் நேரிடாது.

2. கண்ணீரோடு, நாடோறும், உங்கள் பிள்ளைகள் குணப்பட்டுவிட்டார்கள் என்று அறியும்வரை, ஜெபம்பண்ணுங்கள். பிள்ளைகளுடைய குணப்படுதலுக்காக ஜெபத்தில் சிந்தும் கண்ணீர் ஒன்ருகிலும் வீணேபோகாது. பிள்ளைகளுடைய சுகத்திற்காக கண்ணீர் சிந்தியிருக்கிறீர்கள். கிரமமாய்ப் படிக்கும்படி, ஒழுங்காய் வேலைசெய்யும்படி கண்ணீரோடு நீங்கள் ஜெபித்துமிருக்கலாம். சோதனை ஒப்பேறும்படி, பீஸ் சகாயம் கிடைக்கும்படி ஜெபம் பண்ணியிருக்கிறீர்கள். 'என்னுடைய பையனுக்கு அல்லது

354

பிள்ளைக்கு, சோதனை ஒப்பேறுமல்போனாலும், வேலைகிடைக்காமல் போனாலும், சுகவீனம் வரவேண்டியதானாலும்—எல்லாவற்றிற்கும் நான் ஆயத்தமாயிருக்கிறேன். அவனை உம்முடைய பிள்ளையாக மாத்திரம் ஆக்கிவிடும்' என்று ஜெபம்பண்ணும் நிலைமைக்கு வந்து விட்டீர்களா? சுகத்தைப்பார்க்கிலும், படிப்பைப்பார்க்கிலும் தேவ பயமே வேண்டும் என்று விரும்புங்கள். அப்படிப்பட்ட வாஞ்சையோடு, இடைவிடாமல், அவசியமானால், நீங்கள் மரிக்கும்வரைக்கும் ஜெபியுங்கள். தேவன் உங்கள் ஜெபத்திற்கு உத்தரவு அருளாமல் போகமாட்டார்.

3. உங்கள் பிள்ளைகள் சிறுவராக உங்கள் வீட்டிலிருக்கும் போது அவர்களுக்காக அதிக நேரம் செலவழியுங்கள். ஒரு தாய் எழுதுகிறாள்: 'என் பிள்ளைகள் சிறுவராயிருக்கும்போது நான் அவர்களுக்கு என்னையே கொடுத்தேன். என்ன வருத்தம் நேரிட்டாலும், என்னவேலை செய்யாமல் போனாலும், அவர்களோடு பேசவும், அவர்களுக்கு வாசித்துக்காட்டவும், அவர்களோடு ஜெபிக்கவும், அவர்களுக்கு அன்புள்ள சிநேகிதியாக நேரம் செலவழிக்கவும் மாத்திரம் தவறமாட்டேன். எனக்குப் பிரியமான அநேக வேலைகளைச்செய்ய எனக்கு நேரங்கிடையாது. எனக்கு சந்தோஷமாயிருக்கக்கூடிய அநேக காரியங்களை அவர்களுக்காக வெறுத்தேன். அவர்கள் சரீரத்தை உயர்ந்த வஸ்திரங்களாலும் பொன்னாபரணங்களாலும் மினுக்க என்னால் ஏலாது. ஆனால் அவர்கள் மனதையும் ஆத்துமாவையும் வசப்படுத்தி தேவனுக்குப் பிரியமாக அலங்கரிக்கும்படி செய்யக்கூடியதெல்லாம் செய்தேன். வீட்டு வேலைகள் முதலாய் இதினிமித்தம் சிலவேளைகளில் தடைப்படும். இப்போது அதின் பலனை அறுக்கிறேன். என் குமாரர் எல்லாரும் மிஷநேரிமாராய் இருக்கிறார்கள். என் மகள் தேவபக்தியுள்ளவளாய் இருக்கிறாள். எனக்குச் சந்தோஷமான காரியங்களைச் செய்யவும், வீட்டுக்காரியங்களைக் கவனிக்கவும், என் பரம எஜமானுடைய காரியமாய் புறம்பேபோய் வேலைசெய்யவும், உட்கார்ந்து இளைப்பாறவும் போதுமானபடி இப்போது எனக்கு நேரம் இருக்கிறது. அவர்கள் எல்லாரும் இப்பொழுது உலகத்தில் பற்பல இடங்களில் இருக்கிறார்கள். தேவநாமத்தின் மகிமைக்கென்று அவர்களை தேவன் எந்தெந்தவிதமாய் உபயோகிப்பாரோ அதற்கு அவர்களை ஆயத்தப்படுத்தினேன் என்ற எண்ணத்தைப்போல எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் எண்ணம் வேறே இல்லை' என்பதே. நமது தேசத்தில் எத்தனை தாய்மார் இப்படிச் சொல்லக்கூடும்?

4. கடைசியாக, எல்லாவற்றிற்குமேலாக, நீங்கள் முற்றிலும் உங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். தேவனுக்கு வெகு சமீபமாக நீங்கள் ஜீவியுங்கள். உங்கள் வீட்டில் பொறுமை, சாந்தம், அன்பு—இவைகள் சிறந்து விளங்கட்டும். உங்கள் அடுத்த வீட்டுக்காரரோடு எப்போதும் அன்புள்ளவர்களாயிருங்கள். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுள்ள வார்த்தைகளை மாத்திரம் பேசுங்கள், பெரியோரை கனம்பண்ணுங்கள். உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிற பிள்ளைகள் அப்போது இவைகளிலே பழகும். பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டு ஜீவியுங்கள். உங்கள் பிள்ளைகள் நிமித்தம் உங்களைப் பரிசுத்தமாக்குங்கள். அதிகமாக தேவனோடு பேசுங்கள். உங்கள் பேச்சிலும், நடக்கையிலும், எதிலும் தேவனைக் கனம்பண்ணுங்கள்.

தேவ ஒத்தாசையினால் இவைகளைச் செய்துவருவீர்களானால் உங்கள் பிள்ளைகளை ஆதாயம் பண்ணிக்கொள்வீர்கள். யோகபேத் மோசேயை ஆயத்தப்படுத்தினால் போதும். மோசே இஸ்ரவேலரனைவரையும் மீட்டுவிடக்கூடுமே!

NOTES ON INFLUENZA

இன்ப்ளூயென்சா என்னும் ஜுரத்தைப்பற்றி சுருக்கமான குறிப்புகள்

சென்ற வருஷத்தில் உலகத்தின் எல்லா பாகங்களிலும் ஜனங்களுக்கு இன்ப்ளூயென்ஸா என்னும் ஜுரம் கண்டது. ஜுரம் நின்று போனபிறகு அநேகர் பலவீனமடைந்து சொற்ப நோய்களினால் கஷ்டப்பட்டார்கள். கோடைகாலத்தில் இந்த ஜுரத்தினால் ஜனங்களுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால், இலையுதிர்காலத்தில் அது மறுபடியும் தோன்றி, அதனால் அநேக ஜனங்கள் மாண்டார்கள். அது வெகுசாய் மறுபடியும் தோன்றக் கூடும். ஆகவே, அது தங்களுக்கு வராதபடி தடுத்துக்கொள்ள சகலரும் சித்தமாயிருக்கவேண்டும். தகுந்த முறைகளை அனுசரிக்கிறபட்சத்திலே இந்த ஜுரம் ஒருவருக்கும் வராதபடி தடுக்கலாம். ஆனால் இப்போது கீழேசொல்லியிருக்கும் உபாயங்களை ஜனங்கள் அனுசரித்தால் அவர்களுக்கு வெகுவாய் நன்மை உண்டாகும்.

361

இப்படிப்பட்ட உபாயங்களை ஜனங்கள் கவனமாய் அனுசரிக்கும்படி அவர்களை நிர்ப்பந்தப்படுத்த சட்டமொன்றும் கிடையாது. ஆனால், அவர்களுடைய நன்மையை உத்தேசித்தே இப்போது சொல்லியிருக்கும் உபாயங்களை அவர்கள் அனுசரிக்கவேண்டும்.

இன்ப்ளூயென்ஸா ஜுரம் காண்பதற்குமுன் தும்மலும் இருமலும் சாதாரணமாய் உண்டாகின்றன. ஆகவே, ஒரு மனிதனுக்கு தும்மலும் இருமலும் உண்டாயிருந்தால், இதர ஜனங்கள் அவனை விட்டு விலகியிருக்கவேண்டும். மேலும், ஒருவனுக்கு ஜுரமும் இருமலும் தும்மலும் இருந்தால் அவன் இதர ஜனங்களுக்கு சமீபத்தில் போகக்கூடாது.

உடம்பை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டு இந்த ஜுரம் கண்டிருப்பவர்களுக்கு சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உமக்கே ஜுரம் வந்துவிட்டால் நீர் இதர ஜனங்களுக்கு சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கிரமமான வேளைகளில் ஆகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். நன்றாய்த் தூங்கவேண்டும். தேகப்பயிற்சி செய்யவேண்டும். சீதளம் சேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சாராயம் முதலியவை குடிக்கக்கூடாது. இந்தப்படியெல்லாம் செய்தால் ஜுரம்வந்தாலும் ஜனங்கள் அதைத் தாங்கக்கூடியவர்களாயிருப்பார்கள். தும்மல் மூலமாகவும் இருமல் மூலமாகவும் ஜுரம் இதர ஜனங்களுக்குப் பரவும். தும்மும்போதும் இருமும்போதும் மூக்கையும் வாயையும் எப்போதும் மூடிக்கொள்ளவேண்டும்.

வேலைசெய்யும்போதும் தூங்கும்போதும் ஜன்னல்களை எப்போதும் திறந்துவைத்திருக்கவேண்டும். ஒரு தேயிலைக்கரண்டி உப்பு கலந்த ஒரு பைன்ட் தண்ணீரினால் மூக்கின் உட்புறத்தைக் கழுவி, தொண்டையில் அந்த உப்புத்தண்ணீரை விட்டுக் கொப்புளிக்கவேண்டும்.

ஜனங்கள் நிறைந்திருக்கும் அறைக்குள் போகக்கூடாது. கூட்டங்களில் சேராமல் விலகியிருக்கவேண்டும்.

எவருக்காகிலும் ஜுரமாவது தும்மலாவது கண்டால், அவர் உடனே ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும், அல்லது வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டு உடம்பை சூடாக வைத்திருந்து கூடுமானால் வைத்தியர் ஒருவரை வரவழைக்கவேண்டும். காலியாயிருக்கும் அறை கிடைக்குமானால் அதில் படுத்துக்கொள்ளவேண்டும். அந்தப்படி கிடைக்காவிட்டால், அறையின் மற்ற பாகத்துக்கும் படுக்கைக்கும் மத்தியில் மறைப்பு வைக்கவேண்டும். மூக்கில் வடியும் சளியைத் துடைப்பதற்காக கைக்குட்டைகளை உபயோகிக்

கும்பட்சத்தில் அவைகளைத் தண்ணீரில் போட்டு வேகவைக்கவேண்டும். துணிகளையாவது காகிதத்தையாவது உபயோகித்தால் அவைகளைக் கொளுத்திவிடவேண்டும்.

பூர்த்தியாய் சொஸ்தமாகும்வரையில் மறுபடியும் வேலைக்குப் போகக்கூடாது. அந்தப்படி போவது இதர ஜனங்களுக்கு அபாயத்தை விளைவிப்பதாகும். மேலும், அதிசீக்கிரத்தில் வேலைசெய்யத் தொடங்கினால், வேறே வியாதிகளும் காணக்கூடும். ஜுரம் நின்று ஏழு தினம் ஆகும்வரையில் கூட்டங்களுக்கும் வேடிக்கைகள் பார்ப்பதற்கும் போகக்கூடாது. இந்த ஜுரம் கண்டவர் படுத்துக்கொண்டிருந்த அறைக்குள் வெயில் காயும்படிச் செய்ய வேண்டும்.

இன்ப்ளுயென்ஸா ஜுரம் கண்டிருக்கும் ஜனங்களைப் போய்ப் பார்க்கக்கூடாது. ஒருவரோடொருவர் நெருங்கியிருப்பதனாலேயே இந்த வியாதி அநேகமாய் ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகிறதென்பதை மறக்கக்கூடாது. வெளிக்காற்றிலிருப்பதும் அறைகளில் சற்று தாராளமாய் வீசும்படிச் செய்வதுமே இந்த ஜுரத்தைத் தடுப்பதற்குச் சிறந்த உபாயங்களென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

MARY REED, THE MOTHER OF THE LEPERS

குஷ்டரோகிகளால் தாயாரென்றழைக்கப்படும் மேரி ரீட் அம்மாள்

Mary Reed என்ற அம்மாள் வட இந்தியாவின் பெரிய கைத்தொழில் ஸ்தானமாகிய கான்பூர் என்ற இடத்தில் பெண்களுக்குள் Zenana Mission ஊழியம் பார்த்துவந்தார்கள். அவர்கள் அங்கே மத்தியான வெயில் நேரத்தில் நெருக்கமான தெருக்களுக்குள் அலைந்து வீடுவீடாய்ப்போய் அங்கு அடைபட்டிருக்கும் பெண்களுக்குப் போதித்துவந்தார்கள்.

இவ்விதமான வேலையினால் அவர்களுடைய தேகம் அதிகக் களைப்படைந்துபோனபடியால் அவர்கள் இளைப்பாறும்படியாக குளிர்ச்சியான இமயமலைக்கு அனுப்பப்பட்டார்கள். இங்கே அவர்கள் இருந்த நேர்த்தியான மலைப்பாங்கான இடத்தைச் சுற்றி மனிதரால் புறக்கணிக்கப்பட்ட 500 குஷ்டரோகிகள் நிர்ப்பந்தமான நிலமையில் வசிக்கிறதாகக் கண்டுபிடித்தார்கள். அவர்களுக்காகக்

கவலைப்படுவார் ஒருவருமில்லை. இந்த அம்மாள் இக்குஷ்டரோகி களுக்காக அதிகப் பரிதாபப்பட்டாலும் இவர்கள் இளைப்பாறும்படி போயிருக்கும் காலத்தில் அவர்களுக்காக என்ன செய்யக்கூடும்?

இன்னும் 5 வருஷக்காலங்களாக மேரி ரீட் அம்மாள் கான்பூரில் வேலைசெய்தார்கள். இப்போ அவர்கள் சுகம் பூராய்க் கெட்டுப் போய்விட்டபடியால் வைத்தியன்மார் அவர்களை வீட்டிற்குப் போகும்படியாக அனுப்பிவிட்டார்கள். அவர்கள் தங்கள் சொந்த தேசமாகிய அமெரிக்காவுக்குப் போனாலும் அங்கும் அவர்களுக்குச் சுகம் கிடைக்கவில்லை. 15 மாதங்களாக யாதொரு வேலையும் செய்யாமலிருந்தபோதிலும் சுகம் கிடைக்கவில்லை யாதலால் வைத்தியன் மார் அவர்களைக் கவலையாய்ப் பார்த்துவந்தார்கள். விரல்களின் நுனிகளில் ஒருவிதமான குத்தலான வேதனை யிருந்துகொண்டேயிருந்தது. ஒரு காதின் பக்கத்திலும் ஒரு பாகம் கொஞ்சம் வித்தியாசமாய்க் காணப்பட்டது.

அப்போது மேரி ரீட் அம்மாளுக்கு ஒரு operation செய்து 15 நாட்களுக்கு அதிக அமைதியாயிருக்க நேரிட்டது. வேதனையிருந்தபோதிலும் அதிகச் சமாதானமாய் படுத்திருக்கும் அந்த நாட்களில் தான் அந்த அம்மாள் தானே தங்களுடைய வியாதி என்னதென்று திடீரென்று கண்டுபிடித்தார்கள். அதாவது மேரி ரீட் அம்மாள் குஷ்டரோக வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். தங்கள் மனதில் காணப்பட்ட இந்த எண்ணத்தை தன்னுடைய வைத்தியனிடம் சொன்னபோது அவர் கண்ணீருடன் 'இல்லை அம்மா, இது இருக்கக்கூடாது' என்றார். ஆனால் அநேக வைத்தியன்மார் அவர்களைச் சோதித்துப் பார்த்தபோது அந்த அம்மாள் சந்தேகப்பட்டபடியே அவர்களுக்குக் குஷ்டரோக வியாதி ஆரம்பித்திருக்கிறதென்று கண்டுபிடித்தார்கள்.

இந்தச் செய்தி முதலாவது மேரி ரீட் அம்மாளுக்கும் வைத்தியன் மார்களுக்கும் மாத்திரம் தெரியும். ஏனென்றால் அவர்கள் இனிமேல் என்னசெய்யவேண்டுமென்று ஒழுங்குசெய்ய வேண்டியதிருந்தது. தேசத்தைவிட்டு வெளியே போய்விடவேண்டும். ஆனால் தங்களுடைய பெற்றோருக்கும் இனத்தாருக்கும் இப்படி அவர்களுக்கு இக்குஷ்டரோக வியாதி ஆரம்பித்திருக்கிறதென்று தெரியப்படுத்தாமலே அவர்களை விட்டுப் புறப்பட்டுவிடவேண்டுமென்று தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். ஆகையால் சாதாரணமாய் அவர்கள் இந்தியாவுக்கு முன்னைப்போல் மிஷனெரியாகப் போகிறதற்கு ஒழுங்கு செய்தார்கள். வழியனுப்பவேண்டிய நேரம் வந்தபோது அவர்கள் தங்கள் தாயாரைப் பார்த்து, 'அம்மா, எனக்கு விசேஷித்த

வழியனுப்புதல் இல்லாமல் என்னைச் சாதாரணமாய் அனுப்பிவிட்டால் உங்களைவிட்டுப் பிரிகிறதை நான் இலேசாய்த் தாங்கக்கூடும்' என்று கேட்டுக்கொண்டு, தகப்பனுரை ஜெபம் மாத்திரம் செய்யச் செய்து ஒருவருக்கும் ஒரு முத்தம்கூடக் கொடுக்காமல் வெளியேறி விட்டார்கள்.

இப்போ இவர்களுடைய மனதிலிருந்த நோக்கம் என்னவென்றால், தான் ஒரு குஷ்டரோகி என்று அறிந்தவுடன் இந்தியாவில் தான் சுகத்திற்காக மலைக்குப் போயிருக்கும்போது கண்ட குஷ்டரோகிகளின் பரிதாப நிலைமை அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. உடனே தான் அவர்கள் மத்தியில் போய் அவர்களுடைய ஆத்தும சரீரங்களுக்காகக் கவலைப்படும்படி, இந்தக் கொடிய வியாதியின் மூலமாய்க் கர்த்தா தன்னை அழைக்கிறதாக உணர்ந்தார்கள். ஆகையால்தான் இப்படித் தன் நிலமையைத் தன் பெற்றோருக்குங் கூடச் சொல்லாமல் இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தார்கள். வருகிற வழியில் இங்கிலாந்து தேசத்திலும் ஐரோப்பாவின் மற்ற தேசங்களிலுமுள்ள வைத்தியன்மார்களெல்லாரும் பரீட்சித்துப் பார்த்தும் இந்த பயங்கரமான வியாதி இருக்கிறதாகவே சொன்னுர்கள்.

இந்தியா வந்து சேர்ந்தபின்தான் மேரி ரீட் அம்மாள் தங்களுடைய பெற்றோருக்குத் தங்களின் நிலமையையும் தாங்கள் வந்த நோக்கத்தையும் எழுதினுர்கள். அப்போது அவர்கள் ' இந்தப் புறக்கணிக்கப்பட்ட ஜனங்களுக்குள் வேலை செய்யும்படியாகக் கர்த்தர் என்னை அழைத்திருக்கிறுர். இந்த பயங்கரமான வியாதியை எனக்குக் கொடுத்து என்னை ஆயத்தப்படுத்தியிராவிட்டால் இந்த ஏழைக் குஷ்டரோகிகளுக்கு உதவிசெய்பவர் ஒருவருமே இருந்திருக்கமாட்டார்கள்' என்று வெகு மனதைரியத்தோடு எழுதினுர்கள்.

இமயமலையின்மேல் இக்குஷ்டரோகிகள் ஜாஸ்தியாயிருந்த இடத்திற்குப்போய் அங்கு 'சான்டாக் அசைலம்' (Chandag Asylum) என்ற ஒரு சிறு பாதுகாப்பான இடத்தை ஏற்படுத்தினுர்கள். இந்த இடம் மரஞ்செடிகள் புதர் அடர்ந்த இடமாயும் மலைமேல் நல்ல சுத்தமான ஆகாயம் உள்ளதாகவுமிருக்கிறது. இது இருப்புப்பாதையிலிருந்து 6 மைல் தூரத்திற்கப்பாலிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் நாகரீகமாகவும் ஆங்கிலேய பாஷை பேசக்கூடியவர்களும் ஒருவருமே கிடையாது. இந்த சான்டாக் அசைலத்தில் குஷ்டரோகிகளுக்காக சில சிறு குடிசைகளும், ரீட் அம்மாளுக்காக இரண்டு அறை கொண்ட ஒரு குடிசையும் கட்டப்பட்டிருக்கிறது. இவ்விடத்தை அந்த அம்மாள் எப்போதும் 'அலங்கார பர்வதம்' என்று அழைக்கிறுர்கள். இவ்விடத்தில் மேரி ரீட் அம்மாள் மலைகளிலும் பூக்களிலும்

365

மாத்திரம் அலங்காரத்தைக் கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் இந்த ஏழைக் குஷ்டரோகிகளுக்கு உதவிசெய்து, அவர்களுடைய நிலமையை உயர்த்தி, அவர்களுக்கு அன்புகாட்டி, அவர்களை இரட்சகருடைய பிள்ளைகளாக்குவதில்தான் அலங்காரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இங்கிருந்துகொண்டு மேரி ரீட் அம்மாள் அவர்களைச் சுற்றியுள்ள அஞ்ஞான கிராமங்களிலும் சுவிசேஷ பிரசங்கவேலை செய்துகொண்டு வருகிறார்கள். இமயமலைகளுக்குள்ளிருக்கும் நேபாள தேசத்தில் ஐரோப்பிய மிஷனெரிமாரே போகக்கூடாது. ஆனால் அத்தேசத்தில் குஷ்டரோகிகள் ஏராளமாயுண்டு. அவர்கள் தங்கள் தேசத்தில் படும் கஷ்டம் பொறுக்கமாட்டாமல் மேரி ரீட் அம்மாளின் சான்டாக் அசைலத்திற்கு வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இவர்களில் சிலர் திரும்ப தங்கள் தேசத்திற்குப் போகும்போது கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் தங்களோடே கொண்டு போகிறார்கள். இப்படியாக கிறிஸ்துவின் நற்செய்தி குஷ்டரோகிகள் மூலமாய் நேபாள தேசத்திற்குள் செல்லக்கூடியதாயிருக்கிறது.

இந்த குஷ்டரோகிகள் ஒவ்வொருவராய் பயங்கர ரூபத்துடன் புண்கள் நிறைந்தவர்களாகவும் கை கால் மொடித்தவர்களாகவும் இவ்விடத்திற்கு வரும்போது மேரி ரீட் அம்மாள் அந்த ஆளைப் பரலோக இராஜாவின் ஒரு பிள்ளை என்று எண்ணுகிறார்களே யொழிய அவர்களின் அசுத்தத்தைக் கவனிக்கிறதில்லை. தங்களைப்போல இந்
பயங்கர வியாதியை அனுபவித்துவரும் இந்த அம்மாளின் த்தையும்
முகத்தையும் அன்பையும் அவர்கள் ஜீவியத்தின் நே: அன்பு எப்படி
இக்குஷ்டரோகிகள் பார்க்கும்போது கிறிஸ்துவி ருக்கிறது. அவர்
யிருக்கும் என்று அறிந்துகொள்ளக் கூடிய கிறிஸ்துவின் அன்பு
களைச் சுத்தப்படுத்தி போதித்து அன்புகா பார்க்கும்போது எவ்வளவோ
அவர்கள் முகத்தில் பிரகாசிக்கிறதை ட்டரோகிகளுக்கு இந்த அம்மாள்
அலங்காரமாயிருக்கிறது. இக் ஆனால் அவர்கள் புண்களைக் கழுவிக்
சுகம் கொடுக்க முடியாது சொற்ப வியாதியுள்ளவர்களுக்
கட்டி, வேதனையைக் குறைத்து, இப்படியாக உதவி செய்துவருகிறார்கள்.
குப் பரவாதபடி தடுத்து,

இங்கே அவர்கள் நேர்த்தியான ஒரு சிறு கோவிலும் கட்டியிருக்கிறார்கள். இக்குஷ்டரோகிகளுக்கு இக்கோவிலுக்குப் போவது அதிப்பிரியம். இவர்களில் சிலருக்குத் தொண்டை வியாதியினால் சத்தமே கிடையாது; சிலருக்கு சத்தம் முரடாயிருக்கும். கர்த்தருடைய ஆலயத்தில் அவர்களுடைய பாட்டு காதுக்கு இனிமையாயில்லாவிட்டாலும் கர்த்தருக்கு அது வெகு இனிமையாயிருக்கும்.

மேரி ரீட் அம்மாள் இவர்களைச் சோம்பலாக நாட்கழிக்க விடு கிறதில்லை. அவரவர்களுடைய நிலைமைக்குத் தக்கதாக தோட்டத்து வேலையோ, மாடு மேய்க்கிற வேலையோ, இன்னும் ஏதோ மற்ற வேலைகளும் செய்யச் செய்கிறார்கள்.

இந்த சான்டாக் அசைலத்திலுள்ள குஷ்டரோகக் குடும்பம் மேரி ரீட் அம்மாளைத் தங்கள் 'தாயார்' என்று அழைக்கிறது. இந்த அம்மாள் அவர்களைத் 'தேவனுடைய சிறுவர்' என்ற மேலான பேரால் அழைக்கிறார்கள்.

இந்த அம்மாள் தன் ஆண்டவருக்காக சுயவெறுப்போடும் மன தைரியத்தோடும் செய்துவரும் இவ்வூழியத்திற்காக ஜெபிப்போமாக!

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் நவம்பர்மீ

1	ச.	2நாளா.	35.	16—27	11	செ.	கொலோ	4.	1—18	21	வெ.	சகரி.	1.	1—17
2	ஞா.	,,	36.	11—23	12	பு.	எஸ்தர்.	1.	1—12	22	ச.	,,	3.	1—10
3	தி.	புலம்பல்.	1.	1—12	13	வி.	,,	2.	1—11	23	ஞா.	,,	4.	1—14
4	செ.	,,	3.	22—39	14	வெ.	,,	2.	17—23	24	தி.	,,	6.	1—15
6		,,	3.	40—58	15	ச.	,,	3.	1—15	25	செ.	,,	8.	1—17
7	வெ.	லோ.	1.	1—17	16	ஞா.	,,	4.	1—17	26	பு.	,,	9.	9—17
8	ச.	,,	1.	18—29	17	தி.	,,	5.	1—14	27	வி.	,,	11.	1—17
9	ஞா.	,,	3.	1—15	18	செ.	,,	6.	1—14	28	வெ.	,,	12.	1—10
10	தி.	,,	3.	12—11	19	பு.	,,	7.	1—10	29	ச.	,,	13.	1— 9
					20	வி.	,,	8.	1—17	30	ஞா.	,,	14.	1—11

C. L. S. PRESS, MADRAS—1919